HRP Bringing HR to the Forefront
AON Hewitt
McLagan | Radford
HRM AWARDS 2012
The Association of
Human Resource Professionals
18/4, Evergreen Park Road (off Dabare Mawatha), Narahenpita, Colombo 05.
Telephone: +94 11 566 7575 E-mail: hrpsrilanka@gmail.com, www.hrp.lk
Visit our facebook page "Association of Human Resource Professionals"

# தேசத்தின் சிறந்த மனிதவள செயற்பாடுகளை அடையாளம் HRM விருதகள் 2012

தொழிற்துறை மனிதவள செயற்பாடுகளை அடையாளம் காணும் HRM விருது விழாவினை 05வது தடவையாகவும் மனிதவள நிபுணர்கள் அமைப்பு ஏற்பாடு செய்துள்ளது. உள்நாட்டு தனியார் மற்றும் அரச நிறுவனங்கள் சர்வதேசரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நியமங்களுக்கு அமைய மனிதவள மதிப்பீடுகளை செய்வதற்கான பயிற்சியையும் அறிவை வழங்கவே இது ஏற்பாடு செய்யப்படுகின்றது. வர்த்தக துறையில் மனிதவளத்தினை அடையாளம் காணப்பதில் சிறப்பாக செயற்பட்ட நிறுவனங்கள் அடையாளம் காணப்பட்டு சுப்பர் 10 நிறுவனங்களாக கௌரவிக்கப்படும்.

மனிதவள நிபுணர்கள் அமைப்பு 2002 ஆம் ஆண்டு தொடக்கம் இப்பணியை சிறப்பாக செய்து வருகிறது. இவர்களின் இந்த தரப்படுத்தலுக்கு அமைய நாட்டிலுள்ள சிறந்த கூட்டுறவு ஜம்பவான்களும் சிறிய வளர்ந்து வரும் நிறுவனங்களும் அடையாளம் காணப்பட்டு கௌரவிக்கப்படுத்தப்பட்டுள்ளன.

வளர்ந்து வரும் வர்த்தக உலகின் மாற்றங்களுக்கு அமைய இவ்விருதுகளின் தரமும் தொடர்ச்சியாக மேம்படுத்தப்பட்டு வந்துள்ளதுடன், 2012 ஆண்டிற்கான விழாவும் நிறுவனங்களின் உள்ளக மனிதவள ஆற்றலை வெற்றிகரமாக நவீன வர்த்தகதறைக்கு ஏற்றவாறு நிபுணத்துவரீதியில் நாளாந்த அடிப்படையில் திறம்பட மேம்படுத்தியுள்ளது. இவ்வாண்டிற்கான விருகளில் தனியார்துறைக்கு 10 தங்க விருதுகள், 10 வெள்ளி விருதுகள், 06 சிறப்புப் பிரிவு விருதுகள் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன. இவ்வாண்டிற்கான சிறப்பு யாதுஎனின் தனியார்துறையின் பங்கேற்றலும் 03 சிறப்பு தங்க விருதுகளும் உள்வாங்கப்பட்டுள்ளமையாகும்.

இந்த தடவை பங்கேற்றும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு நடுவர்கள், சிறந்த உற்பத்தியாற்றல், நிறுவனங்களுக்கு நீண்டகாலபயனை அளிக்கும் ஊழியர் வளர்ச்சி, அவரவர் துறைசார் நீண்டகால பயனுள்ள செயற்பாடுகள் என்பவற்றில் விசேட கவனம் செலுத்துவார்கள்.மிகவும் விஞ்ஞானரீதியில் தயாரிக்கப்பட்ட AON Hewitt மதிப்பீடு மூலம் போட்டியாளர்கள் மதிப்பீடும் ஆய்வும் செய்யப்படுவார்கள். முதல் சுற்றில் தெரிவு செய்யப்படும் நிறுவனங்கள் சுயாதீன நடுவர்கள் மூலம் தரப்படுத்தப்படுவார்கள் பின்னர் புள்ளிகள் வழங்கப்பட்டு தங்கம் மற்றும் வெற்றி பெறும் வெற்றியாளர்கள் ஜூலை மாதம் இடம்பெறும் HRM விருது விழாவின் போது கௌரவிக்கப்படுவார்கள். இதன் சிறப்பம்சம் என்னவெனில் மிகவும் சுயாதீனமான நடுவர்கள் குழுவினால் மிகவும் கட்டுக்கோப்பான முறையில் இம்மதிப்பீடுகள் இடம்பெறுவதேயாகும். பங்குபற்றும் ஒவ்வொரு நிறுவனத்திற்கும் சங்கேதகுறிகளே வழங்கப்படும். இதனூடாக நடுவர்கள், குழுஉறுப்பினர்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோர் விருது விழாவின் போதே வெற்றியாளர்களை அறியக்கூடியதாக இருப்பர்

President
Gayathri Chakravarthy
Distilleries Company of Sri Lanka PLC

Vice President
Chiranthi Cooray
Hatton National Bank PLC

Vice President
Asitha Jayatunga
Expolanka Holdings PLC

Secretary
Thilan Perera
HNB Assurance PLC

Treasurer
Maduka Rathnaweera
CIC Holdings PLC

Asst. Secretary
Chathuskka Seneviratne
Aitken Spence PLC

Asst. Treasurer
Dinali Peiris
MAS Holdings

Immediate Past President
Isuru Tillakawardana
Commercial Bank of Ceylon PLC

Committee
Ishan Dantanarayana
Brandix Group

Nalin Pasqual
Asiri Group of Hospitals

Dimuth De Alwis
Hemas Holdings PLC

Pulasthika Wirasinha
John Keells Holdings PLC

Harshana Dassanayake
Dialog Axiata PLC

Surani Amerasinghe
Ceylon Tobacco Company PLC

Dilrukshi Kurukulasuriya
Diesel & Motor Engineering PLC

Chathurika Amarakoon
Unilever Sri Lanka Ltd

Zehran Fareed
John Keells Hotels

Chitral Perera
Singer (Sri Lanka) PLC

இவ்விழாவிற்கு முன்னர் தொடர்ச்சியான கற்கை மற்றும் அறிவூட்டல் நிகழ்ச்சிகள் இடம்பெறும். தற்போது உள்ளூர் மற்றும் உலகளாவியரீதியிலான மனித திறமை முகாமைத்துவம் பற்றிய தலைப்புகள் ஆராயப்படும். இக்கற்கை நிகழ்வுகள், தலைமை அதிகாரிகள், நிறைவேற்று அதிகாரிகள், மனிதவள நிபுணர்களுக்கு தத்தமது நிறுவனங்களின் மனிதவள அபிவிருத்தி மற்றும் வளர்ச்சி பற்றி ஆராய வாய்ப்பளிக்கும். இதற்கமைவான தொழில்நுட்ப மாற்றங்களும் ஆராயப்படும். இவ்வறிவூட்டல் சம்மேளனங்களில் உள்ளூர் மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த திறமையான பல மனிதவள பேச்சாளர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். இவை HRM விருது விழாவிற்கு ஓர் முன்னோட்டமாகவே இடம் பெறும்.

HRM விருது விழா 2012 இந்தியாவை சேர்ந்த மிகச் பெரிய மனித வள ஆய்வு மற்றும் உலகிற்கு சிறந்த தீர்வுகளை வழங்கும் AON Hewitt நிறுவனத்துடன் இணைந்து நடாத்தப்படவுள்ளது. இந்நிறுவனம் 90 நாடுகளில் 330 அலுவலகங்களையும் அ.டொ 4.3 பில்லியன் ஆண்டு வருமானத்தை கொண்டுள்ளதுடன், குளோபல் போரூன் நிறுவனத்தில் பட்டியலிடப்பட்டுள்ளது முதல் தர 500 நிறுவனங்களில் 80% வை இந்நிறுவனத்துடன் இணைந்தே செயற்படுகின்றன. HRM விருது விழா 2012 பங்காளிகளாக AON Hewitt நிறுவனம் தமது அனுபவங்களையும் ஆற்றல்களையும் பகிர்ந்து கொள்ளவுள்ளனர். HRM விருது விழா 2012 இற்கு பிரதான அனுசரணையினை டீசல் அன்ட் மோட்டர்ஸ் என்ஜினியரிங் பீ.எல்.சீ. நிறுவனம் வழங்குவதுடன், சீ.ஐ.சீ நிறுவனம் இணை அனுசரணையினை வழங்குகிறது. உத்தியோகபூர்வ ஒலி, ஒளி பங்காளர்களாக DAV Technologies செயற்படவுள்ளது.

<u>வெளியீடு</u>
மனிதவள நிபுணர்கள் சங்கம்
24.01.2014